சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் ஏற்பாட்டில் தி.மு.க. பவள விழா மற்றும் முப்பெரும் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடியேற்றி இனிப்பு வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், சா.மணிமுடி, கே.எஸ். ரவிச்சந்திரன் மற்றும் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் சொ.வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர், கே.எஸ்.எம். நாதன், கோ.மணி, பொதுக்குழு உறுப்பினர் நிர்மலாதேவி, மாமன்ற உறுப்பினர்கள் எல்.சுந்தர்ராஜன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், பகுதி கழக நிர்வாகிகள், எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மன்னன், அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வட்ட கழக செயலாளர்கள், வி.விஜயகுமார், ஆர்.பாபு என்கிற சந்திரசேகர், டால்பின் அரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன், மாவட்ட பிரதிநிதிகள், ஆர். நித்யராஜ், எஸ்.ராஜதுரை, ஜெயக்குமார், வெற்றி வீரன், ஸ்ரீதர், தன இளங்கோ, எஸ்.துலுக்காணம், மற்றும் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் துணை அமைப்பாளர்கள்,பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக அமைப்பாளர்கள் மற்றும் பி.எல்.ஏ. 2 நிர்வாகிகள் பி.எல்.சி. நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் கழகத் தொண்டர்கள், தோழர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது!

அரசாணை வெளியீடு!

சென்னை, செப். 18-

நீர்நிலைகளை பராமரிப்பதில் சிறப்பாக செயல்படும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தனி நபர்களுக்கு "முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர்" விருது வழங்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

நீர்நிலைகளை பாதுகாக்கும் பணியில் செயல்படுபவர்களை அங்கீகரிக்கும் விதமாக முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது வழங்கப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

அதனை நடைமுறைப்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், நீர்நிலை களை பராமரிப்பதில் சிறப்பாக செயல்பட்டு வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தனி நபர்களுக்கு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 38 மாவட்டத்திற்கு 38 பேருக்கு விருது வழங்கப்பட உள்ளதாகவும், விருது பெறுபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத்தொகை என்ற அடிப்படையில் 42 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி மீட்கப்பட்டவர்கள் சென்னை திரும்பினர்!

பாதுகாப்பாக அழைத்து வந்த தமிழ்நாடு அரசிற்கு நெஞ்சார்ந்த நன்றி!

சென்னை, செப். 18-

உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி மீட்கப்பட்ட சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த 30 பேர் பத்திரமாக தாயகம் திரும்பினர்.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் இருந்து உத்தராகண்ட்மாநிலம், ஆதிகைலாஷ் கோயிலுக்கு கடந்த 1ம் தேதி ஆன்மிக சுற்றுலா சென்ற 30 பேர், அங்கு ஏற்பட்ட நிலச்சரிவால்,சாலைகள் துண்டிக்கப்பட்டு சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் சிக்கி தவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர்களை மீட்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள், உத்தராகண்ட் மாநில அரசை தொடர்பு கொண்டு, அவர்களை உடனடியாக மீட்க வலியுறுத்தினர். இதனையடுத்து நிலச்சரிவில் சிக்கிக் கொண்ட 30 தமிழர்களும் ஹெலிகாப்டர் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர். இந்த நிலையில் ரயில் மூலம் 20 பேரும், விமானம் மூலம் 10 பேரும் சென்னை அழைத்து வரப்பட்டனர்.உரிய நடவடிக்கை மேற்கொண்டு தங்களை பாதுகாப்பாக அழைத்து வந்த தமிழ்நாடு அரசிற்கு அவர்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் தந்தை பெரியாரின் 146 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆவடியில் உள்ள அவரது திருவுரு சிலைக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றனர். அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், பகுதி கழகச் செயலாளர் ஜி. நாராயணபிராசத், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர் உள்பட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பலர் உள்ளனர்

செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் அண்ணாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

செஞ்சி, செப்.18-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாள் விழா தமிழகம் முழுதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் உள்ளபேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கும், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திரு உருவப்படத்திற்கும் நகர செயலாளர்கார்த்திக் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர் . இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவிமரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன். பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை

தி.மு.க. மகளிர் அணி - தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை,செப்.18-

தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைத்தள குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்.

கழகத்துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணி இணைச்செயலாளர்குமரிவிஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர் ஜெயராம் மஹால். 20/09/2024 வெள்ளிக் முமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.பொருள்:

1கழக ஆக்க பணிகள்.

2.2026 சட்டமன்றத் தேர்தலில் மகளிரணி பங்களிப்பு.

3.மகளிரணி உறுப்பினர் சேர்த்தல். இவ்வாறு ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிரணிச்செயலாளர். நாமக்கல் ப. இராணி, மாநில மகளிர் தொண்டரணிச்செயலாளர் அறிக்கை விடுத்துள்ளனர்.

தி.மு.க. 75 ஆம் ஆண்டு பவள விழா, கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி, சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, 98 (அ) வட்ட தி.மு.க. சார்பில் வட்ட செயலாளர் சி.தேவராஜ் தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் பங்கேற்று தொகுதி மக்களுக்கு சிற்றுண்டி வழங்கி புதிதாக கழகத்தில் இணைந்தவர்களுக்கு கழக உறுப்பினர் அட்டையை வழங்கி சிறப்பித்தார். உடன் பகுதி செயலாளர் வே.வாசு, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணியின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.